# விளம்பரம்™

VLAMBARAM™

☎: 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE



வீடு விற்பது, வாங்குவது

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் sales rep.

RE/MAX Crossroads Rlty Inc.

நம்பிக்கை ▲ நேர்மை ▲ திறமை



நதி 09 - பாலம் 03 FEBRUARY 01, 1999



* தேநீர்-புற்றுநோயை கட்டுப்படுத்துமா? (பக்கம் 2)
* அமைதியாக உயிர் பறிக்கும் "எயிட்ஸ்" (பக்கம் 9)
* தலைவலியால் அவதியா? (பக். 4)
* எம்.ஜி.ஆர் & சிவாஜியின் கூண்டுக்கிளி? (பக்கம் 7)
* ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துபவர்கள் அறிய (பக்கம் 10)
* முரளீதரன் Vs அவுஸ்திரேலிய நடுவர்கள் இழுபறி (பக்கம் 8)
* வாகனம் குத்தகைக்கு எடுப்பதா / வாங்குவதா நல்லது (பக்கம் 3)
* 1999ம் ஆண்டிற்கான இடைக்கால வீட்டு வரி (பக்கம் 12)



**SABONA & Gift**

"முடி உதிரும் தொலைலை இனி இங்கு இல்லை" எவமாரட்டின்" சகல கலைமகள் புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

3238 Eglinton Ave. E. Scarborough, Ont. M1J 2H6

(கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)


## உலகத்தில் பெரியநாடுகள்

கடந்த விளம்பர இதழில் உலக நாடுகளில் சனத்தொகையில் மிகப்பெரிய முதல் பத்து (10) நாடுகளையும் பற்றி பார்த்திருந்தோம். அந்த இதழைப் பார்த்திருந்த வாசகர் ஒருவர் இவ் இதழில் உலக நாடுகளில் பரப்பளவில் பெரிய நாடுகளைப் பற்றிய தகவல்களைக் குறிப்பிடும்படி கேட்டு இருந்தார். எனவே அவற்றைப் பற்றி இந்த இதழில் உலகக் கோலங்களில் எழுதலாம் என எண்ணியுள்ளோன். இந்த உலகில் 1/3 பகுதி நிலத்தாலும் 2/3பகுதி நீராலும் அமைக்கப்பட்டுள்ளது. இறைவன் அமைத்த இந்த பூமியையே மனிதன் தனக்கு ஏற்றவாறு பங்குபோட்டுக் கொண்டுள்ளான். காண்பவற்றை பங்கீடு செய்வதில் மனிதனுக்கு நிகர் மனிதனே. இவ்வாறு பங்கு போட்டுப் போட்டு இந்த பூமியிலுள்ள நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்தே செல்கின்றது. உலகயுத்தங்கள் ஆரம்பிப்பதற்கும் இந்த பூமி பிடிக்கும் ஹிட்லரின் பேராசையே காரணமாக இருந்தது ...பரிதா இருந்த நாடுகள் சிறிதாக வருகின்றது.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

## இந்த இதழின் சிந்தனைகள்

*எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது, எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும் உன்னுடையது எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்? எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு? எதை நீ படைத்திருந்தாய் அது வீணாவதற்கு? எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது எதை கொடுத்தாயோ, அது அங்கேயே கொடுக்கப்பட்டது, எது இன்று உன்னுடையதோ அது நாளை மற்றொருவருடையதாகிறது மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும் இந்த மாற்றம் உலக நியதியாகும்!*

## வேலை செய்யும் பெற்றோரின் குழந்தைகள் பராமரிப்பு பணம் பெற்று விட்டீர்களா? இனி மேலும் தாமதம் வேண்டாம்

மாதாமாதம் கனடிய மத்திய அரசினால் குழந்தைகள் வரி சலுகை பணம் பெறுவது போல, தற்போது வேலை செய்யும் பெற்றோர் தங்கள் குழந்தைகளின் பராமரிப்பு செலவுக்கு என ஒரு குறிப்பிட்ட தொகையினை வழங்கும் திட்டத்தினை ஒன்ராரியோ மாகாண அரசின் நிதி அமைச்சு அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இவ் சலுகை பணத்தினை பெற்றுக் கொள்வதற்கு இருக்க வேண்டிய தகைமைகள்

1. ஒன்ராரியோ மாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. மத்திய அரசின் குழந்தைகள் வரி சலுகை பணம் (ChildTax Benefit) பதிவு செய்யப்பட்டு பெற்று வருபவராக இருத்தல் வேண்டும்
3. ஏழு வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளாக இருத்தல் வேண்டும்
4. பெற்றோர் குறிப்பிட்ட ஒரு வருமானத்திற்கு வேலை செய்திருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகள் உள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். மத்திய அரசின் குழந்தைகள் வரிசலுகை பணம் பெறுவதற்கு இதுவரை பதிவு செய்யாதவர்கள் இனி மேலும் பதிவு செய்து விட்டு இவ் மாதாந்த நலதிட்டத்தினை பெற்றுக் கொள்ளலாம்.

(தொடர்ச்சி 12 ம் பக்கம்)




**SINGAPORE CELLULAR**

Bell Mobility

$50.+Tax per Month

CANTEL

மாலை 7 மணி தொடக்கம்

காலை 7 மணி மட்டும் இலவசம் (FREE)

வெள்ளி மாலை 7 மணி தொடக்கம்

திங்கள் காலை 7மணி மட்டும் இலவசம் (FREE)

175 min FREE (Month) Add. 20 cents only

Additional every Min. 20 சதம் மட்டுமே

Mobile Message, Call Forwarding FREE

Call Display, Call Waiting FREE, Per Second Billing

For more Information: சத்தி (416) 745-2378

Hotline: (416) 980-1234

**துரித பணமாற்றுச் சேவை**

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221



**சிவாகம கிரியா பீடம்**

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)

திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.

# அறிவும் ஆக்கமும் (27)



*- விஜே குலத்துங்கம்*

எமது தாயகத்தில் அதிகமானோர் தேநீரையே விரும்பி அருந்துவார்கள். ஆனால் கனேடியர்கள் கோப்பியையே விரும்பி அருந்துவார்கள். ஆனால் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதிவரை இலங்கையில் அனைவரும் கோப்பியையே அருந்தி வந்தார்கள் .1860 கள் வரை மலைநாட்டுப் பகுதி முழுவதும் கோப்பியே பயிரிடப்பட்டு வந்தது. ஆனால் 1860 களில் கோப்பிப் பயிரில் Coffee rust எனப்படும் நோய் பரவி அவற்றை முற்றாக அழித்தன. அக்கால இலங்கையை ஆண்ட பிரித்தானியர்கள், கோப்பியை அகற்றிவிட்டு தேயிலையை பயிரிட்டார்கள். இலங்கையில் அக்காலத்தில் மக்கள் தேநீர் குடிக்கும் பழக்கம் இல்லாமல் இருந்ததினால், ஆரம்பத்தில் தேநீர் பாவனையை ஊக்குவிப்பதற்காக தேயிலை நிறுவனங்கள் ஊர் ஊராக சென்று மக்களின் முன்னால் தேநீரை தயாரிக்கும் விதத்தை காண்பித்து இலவசமாக அவற்றை மக்களுக்கு பழக்கினார்கள்.

தேயிலைத் தாவரம் உண்மையில் ஒரு மரமாகும். தானாக வளரவிட்டால் 12-14 அடி உயரமான மரமாக வளரும். ஆனால் தேயிலைத் தோட்டங்களில், தேயிலை கொழுந்து இலைகளை பறிப்பதற்கு வசதியாக கத்தரித்தல் - Pruning முறைமூலம் கட்டையான செடியாக வளர்க்கப்படும் தேயிலையில் மூன்றுவிதமான தேயிலை தயாரிக்கப்படுகின்றது. முதலாவது எமக்கு மிகவும் பரிச்சயமான கறுப்பு தேயிலை - Black Tea, மற்றது சீனர்கள், ஜப்பானியர்கள் அருந்தும் பச்சை தேயிலை - Green Tea, மூன்றாவது வகை இரண்டிற்கும் இடைப்பட்ட மண்ணிறமான Oolong Tea ஆகும். ஆனால் மூன்று வகையும் ஒரேவிதமான Camellia Sinensis எனப்படும் தேயிலைச் செடியிலிருந்தே தயாரிக்கப்படுகின்றது. ஆனால் தயாரிக்கும் முறை வித்தியாசமானது.

கறுப்புத் தேயிலைத் தயாரிப்பின்போது, பறிக்கப்பட்ட கொழுந்துகள் முதலில் அரைக்கப்பட்டு, சில மணித்தியாலங்கள் பரவி வைப்பதன் மூலம் நொதிக்க வைக்கப்படுகின்றது. அரைக்கப்படும்போது கலங்கள் உடைந்து நொதியங்களால் தாக்கப்பட்டு, நொதிக்கப்படுவதால் மண்ணிறமாகின்றது (வாழைப்பழங்கள், அப்பிள்களும் அடிபட்டு நசுக்கப்படும் போது அவை மண்ணிறமாகி கறுத்துப் போவதும் இதே காரணத்தினால்) நொதிக்கப்பட்டு பின்னர் உலரவைக்கப்பட தேயிலை கறுப்பு நிறமாகின்றது.

பச்சைத் தேயிலைத் தயாரிக்கப்படும் போது அவை நொதிக்கப்படுவதில்லை. நேரடியாக உலர்த்தப்பட்டு, இதன் மூலம் நொதியங்கள் அழிக்கப்பட்டு நொதிப்பது தடைபடுத்தப்பட்டு, பின்னர் சிறு [illegible] இருக்கும். குறைவாக நொதிக்க வைக்கப்பட்ட தேயிலை Oolong Tea) எனப்படும்.

ஆரம்ப காலத்தில் இருந்து Green Tea உடலிற்கு மிகவும் நல்லது என்றும், நோய்களைத் தடுக்க வல்லது எனக் கூறபட்டு வந்தது. ஆனால் இவற்றிற்கெல்லாம் தற்போது மருத்துவச் சான்றுகள் உள்ளன. Purdue University ஐச் சேர்ந்த Doroft James Moore ஆகிய ஆராய்ச்சியாளர்கள் பச்சைத் தேயிலையில் உள்ள Epigallocatechin Gallate அல்லது EGCg எனப்படும் பதார்த்தம் Tumours எனப்படும் கட்டிகளைக் கரைக்கக் கூடிய வல்லமையும், புற்று நோய்- Cancerஐ கட்டுப்படுத்தும் தன்மையும் உடையது எனக் கண்டுள்ளார்கள் ஒரு நாளைக்கு நான்கு கோப்பைக்கு அதிகமாக Green Tea ஐ அருந்துபவர்களுக்கு Cancer வரும் அளவு குறைவு என ஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ளார்கள். கறுப்புத் தேயிலையிலும் ECGg காணப்பட்டாலும், பச்சை தேயிலையில் 100 மடங்குவரை அதிகமாக காணப்படுகின்றது.

இதைவிட இங்கிலாந்திலும் Cambridge பல்கலைக்கழகத்திலும் Royal Free Hospital School of Medicine ஐயும் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் Antibiotics க்கும் மாறாத கிருமித் தாக்கங்களையும் குணமடைய வைக்கும் என கண்டுள்ளார்கள். 1940ல் இருந்து Antibiotics எனப்படும் நுண்ணிய கொல்லிகள் பக்டீரியாவினால் ஏற்படும் கிருமித் தாக்கத்திற்கு எதிராக பாவிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் காலம் செல்ல இந்த Antibiotics ஐ எதிர்க்கக்கூடிய பக்டீரிய இனங்கள் தோன்றின. இந்த இனங்கள் பென்சிலினை அழிக்கக்கூடியதாகவும், தம்மைச் சுற்றி பாதுகாப்பான கலச்சுவர் பென்சிலினை அழிக்கக்கூடியதாகவும், தம்மைச் சுற்றி பாதுகாப்பான கலச்சுவரை உருவாக்கக்கூடிய இயல்பையும் உடையன. ஆனால் தேயிலையிலுள்ள பதார்த்தம், இந்த இயல்பை நீக்கி பக்டீரியா Antibiotic அழிக்கக்கூடிய வல்லமை உடையது என இந்த பிரித்தானிய ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

Redwine நோய்களை எதிர்க்கும் வல்லமையுடையது ஆராய்ச்சியாளர்கள் முன்னர் கண்டுபிடித்தவை. ஆனால் தற்போது பச்சைத் தேநீர் Red wine ஐ விட இரண்டு மடங்கு நோய் எதிர்ப்பு வல்லமையுடையது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. Vitamin C ஐ விட பச்சை தேநீரிலுள்ள Antioxidant 100 மடங்கு வலு உள்ளது எனவும், புற்றுநோய், இருதய வியாதியை எதிர்ப்பதில் Vitamin E ஐ விட பச்சைத் தேநீர் 25 மடங்கு வல்லமையுடையன எனவும் ஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ளனர். பச்சைத் தேநீரிலுள்ள ECGg என்ற பதார்த்தம், Red Wine இலுள்ள சமீபத்தில் மிக பிரபல்யமான Resveratol ஐ விட இருமடங்கு சக்தியுடையது எனவும் கண்டுள்ளார்கள்.

கலிபோர்ணியாவிலுள்ள Kaiser Permanette Medical Care Program ஐச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், தினமும் அரைக் கோப்பை தேநீருக்கு அதிகமாக் உட்கொண்டால் கருத்தரிக்கும் வல்லமை இருமடங்காக இருக்கும் எனக் கண்டுள்ளார்கள். தேயிலையிலுள்ள Polyphenols ம் Xanthinesம் ஆரோக்கியமான சூல்களையும், முளையங்களையும் உருவாக்கவல்லன எனக் கூறப்படுகின்றது.

அண்மையில் Washingtonல் நடைபெற்ற இரண்டாவது சர்வதேச தேயிலை மனித ஆரோக்கிய மகாநாட்டில் பல்வேறு மருத்துவ சான்றுகள் முன்வைக்கப்பட்டன. கோப்பியை விட, தேநீர் சிறந்து. கறுப்பு தேநீரை விட, பச்சை தேநீர் பலநூறு மடங்கு சிறந்தது.

A few cups of green tea a day, will keep the doctor away!

*********************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை *இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் -*
*61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.*


புதிய நிர்வாகத்தின் கீழ்

**Markham / Sheppard** பகுதியில்

**NEW SPICELAND**

☎ : 292-0086


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 92

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | 3 | | ■ |
| | ■ | | ■ | ■ | | ■ | |
| 4 | | | | ■ | | ■ | |
| | ■ | | ■ | ■ | | | 5 |
| | ■ | ■ | 6 | | | ■ | ■ |
| ■ | 7 | | | ■ | 8 | | 9 |
| 10 | ■ | ■ | | ■ | ■ | 11 | 12 |
| 13 | | | | | | ■ | |

**இடமிருந்து - வலம்**

1. நோபல் பரிசுபெற்ற இவ் இந்திய விஞ்ஞானியின் பெயரில் அமெரிக்கா விண்வெளி அவதான நிலையம் ஒன்றை அனுப்ப உள்ளது.
4. புகழ்
5. இன்நாள் (வல-இட)
6. மேன்மை
7. காவல் மேடை
8. சீலை
12. பாட்டு (வல - இட)
13. மார்கழியில் அதிகாலையில் பாடப்படுவது

**மேலிருந்து கீழ்**

1. இசை
2. சீர்படுத்து
3. பெரிய கறுத்த எறும்பு
5. முடிவு (கீழ்-மேல்)
6. நிச்சயம்
9. விடியற்காலம்
10. நியாயம்
11. மறுமொழி (கீழ்-மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "ஸ்பைஸ் லாண்ட்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் February 27, 99க்கு முன்னர் கிடைக்க வேண்டும். Address: **P.O.Box 37527, 31 Tapscott Rd., Scarborough, Ont. M1B 5P9**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| த | ன் | ன | ம் | பி | க் | கை | ■ |
| ச | ■ | ■ | ■ | ர | ■ | ஈ | ■ |
| ர | ■ | ■ | ம் | த | கா | ■ | கை |
| த | ன | ம் | ■ | லா | ■ | ■ | ன |
| ன் | ■ | ■ | ன் | த | டி | ண் | ப |
| ■ | மா | த | வ | ன் | ■ | ■ | ப் |
| பா | ரி | ■ | ற | ■ | ணி | ■ | ர் |
| சி | ■ | ன் | ம | த் | ப | ர | சூ |

**#91இல் வெற்றி பெற்றோர்**

1) Jegalatha Paranthaman, Scarboro
2) Yogeswary Balasingam, Scarboro


நியூ ஸ்பைஸ் லாண்ட்
5800 Sheppard Ave. E.
Unit#16 Scarborough, Ont.


அவித்து அரித்த மா **1lb .53¢ 40 lb** மேல் **Free Delivery**
- கொத்து ரொட்டிக்குரிய ரொட்டி
- **Patty - Rolls - Cutlets - Puddings**
- இடியப்ப **Machine**
- மின் தேங்காய் துருவி

✆ (416) 288-8177
**E.Mail luxmy@gloimpex.com**

Special Discount for Take-out / Rescounts & Caterers

**MOVING DELIVERY**


* FOR SMALL OR BIG MOVING
* REASONABLE RATES
* RELIABLE SERVICES




☎: (416) 286-7562 CELLULAR PHONE: 562-7977

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
**Motor shampoo**
**Interior shampoo**
**Exterior wash & waxing**






**Repairs**
**safety certification**
**overall maintenance**
**under coating &**
**Rust proofing**

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

☎ [416] **285-4998**

முகவரி: **2500 LAWRENCE AVE. EAST, UNIT #11**
**SCARBOROUGH, ONT.** (MIDLAND & LAWRENCE)



## Lease (வாகனகுத்தகை) முடியும் போது?

இன்று நம்மவர் பலரும் வாகனங்களை குத்தகைக்கு (Lease) எடுக்கின்றனர். பலரின் வாகனங்களின் Lease காலம் முடிந்து திரும்பவும் Lease எடுக்கின்றனர். நீங்கள் எப்படி வாகனத்தை பாவிக்க விரும்புகிறீர்கள் என்பதை முடிவு செய்யுங்கள். அதாவது நீங்கள் ஒரு வாகனத்தை நீண்டகாலம் உதாரணத்திற்கு 10 வருடங்கள் பாவிக்க விரும்புவராக இருப்பின் அந்த வாகனத்தை நீங்களே வாங்கிக் கொள்வது சிறந்தது. நீங்கள் அந்த வாகனத்தை வாங்க முன்னர் அந்தவாகனத்தின் மார்க்கட் பெறுமதி என்ன என்பதை உறுதி செய்யுங்கள். அந்த வாகனத்தை வாங்குவதனால் உங்களுக்கு இலாபமா என்று பாருங்கள். ஏனெனில் ஜப்பானிய வாகனங்களாகிய **Honda or Toyota** போன்றவற்றின் மீள் விற்பனை (Re-Sale) பெறுமதி மற்றய தயாரிப்புகளின் மீள்விற்பனை பெறுமதியை விட மிகமிக அதிகம்.

ஜப்பானிய வாகனங்களை (Honda or Toyota) வாங்கிவிட்டு நீங்கள் தனியாருக்கு நல்ல விலைக்கு விற்றும் பெரும்பணம் சம்பாதிக்கலாம். அதேவேளை மற்றய தயாரிப்புகளை வாங்கமுன்னர் நீங்கள் பலவற்றையும் ஆராய்ந்து வாங்குவது நன்மை பயக்கும். விலைகூடிய எந்த வாகனங்களையும் எம்மால் முடிந்த மாதக்கட்டணத்தில் பெற்றுக்கொள்ள Lease கை கொடுக்கின்றது. Lease இல் வாகனம் [illegible] போது பலவிடயங்கள் கவனிக்கப்பட வேண்டி இருப்பதால் நம்பிக்கையானவர் மூலம் உங்கள [illegible]களை பெறுவது நலம் பயக்கும்.

விலைகூடிய எந்த வாகனங்களையும் எம்மால் முடிந்த மாதக்கட்டணத்தில பெற்றுக்கொள்ள Lease கை கொடுக்கின்றது. Lease இல் வாகனம எடுக்கும் போது பலவிடயங்கள் கவனிக்கப்பட வேண்டி இருப்பதால் நம்பிக்கையானவர் மூலம் உங்கள் வாகனங்களை பெறுவது நலம் பயக்கும். நீங்கள் Lease இல் எடுத்த வாகனத்தை திருப்பிக் கொடுப்பதாக முடிவு செய்திருந்தால் திருப்பிக் கொடுக்க முன்னர் அதனை வெளியில் விற்று சில தொகையை பெறலாமா என்று முயற்சித்து விட்டு கொடுங்கள். வெளியில நீங்கள் கொடுக்கும் போது சில ஆயிரம் டொலர்களை உங்களால் சம்பாதிக்கவும் முடிகின்றது.

அதாவது நீங்கள் Lease இல் எடுத்த போது உங்களுக்கு கிடைத்த Buy back price (ரும்ப வாங்கும் விலை) ஐ விட கூடுதலாக நீங்கள் விற்க்கும் அவ்வளவு பணமும் உங்களுக்கே சேர்வதாகும்.

உங்களுக்கு Honda வாகனத்தை Lease இல் எடுக்க விரும்பின் என்னுடன தொடர்புகொள்ளலாம்.

சோதீஸ் - வேலை: (416) 364-1116 அல்லது Cell (416) 704 -1179

*We are entering 8 th year service in Scarborough.*



**Better Work ...**
**Less Money**

**N.T.E Auto Inc.**
New Trade Engineering

We service
EUROPEAN, JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.

**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**


We will reduce the worry and expense of maintaining your car by offering:

- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

என். ரி. ஈ. ஓட்டோ இங்.

**AUTO INC.**
New Trade Engineering


151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎ (416) 750 - 1573
SIVABALAN




# AUTO THAVAS
ONT. INC.

**Quality Used & New Car Dealer**

**Since 1992**



வாகனங்களை விற்கவும்
வாங்கவும் மற்றும் சகல
வாகனங்களுக்கான
பழைய, புதிய
உதிரிப்பாகங்கள்
பராமரிப்புத்
தேவைகளுக்கும்
நாடுகள்
தவா (Thava)

**We Buy, Sell & Trade Imported and Domestic Cars**

**New & Used Parts Including Engine, Transmission & All Electrical Parts**

*Your Friendly Automotive Dealer*

**Pl Call: Thava**

**Tel: (416) 439-8618**
**Res: (416) 438-4250**
2946 Eglinton Ave. East, Scarborough Ont, M1J 2E7




# ஆரோக்கிய வாழ்வு (26)

*- N. செல்வசோதி*

## பாத ஹஸ்த சிம்மாசனம்

பாத ஹஸ்த சிம்மாசனம் என்பதனை தென் இந்தியாவில் ஐயப்ப ஆசனம் என்றும் அழைப்பதுண்டு.

**செய்முறை** இரு பாதங்களும் தரையில் தொடும்படி இருந்துகொண்டு பின் விரல்களுடன் சேர்ந்த பாதங்களின் நுனிப்பகுதி மட்டும் தரையில் பதிந்திருக்க குதிக்கால்களுடன் சேர்ந்த கணுக்கால்களை தரைக்கு சமாந்தரமாக படத்தில் காட்டியபடி நிறுத்தவும் பின் உடலை நேராக வைத்து முள்ளந்தண்டு நேர் கோட்டில் இருக்கும்படி நிமிர்ந்து இருக்கவும். கைகள் இரண்டும் முழங்கால்களை அமுக்கியபடி இருக்கவேண்டும்.



இந்த ஆசனம் பார்வைக்கு மிக எளிதாக இருந்தாலும் இதன் பலன்கள் மிகமிக அதிகம்

1. அதிக நேரம் நின்று வேலை செய்வதால் பாதங்களில் உண்டாகும் வலி, உவாதைகள் சில நாட்கள் பயிற்சியின் பின் மறையும்.
2. மலச்சிக்கலும் அதன் காரணமாக உருவாகும் மூல வியாதியும் என்றும் அணுகாது.
3. அடிவயிறு, துடைகள் என்பனவற்றில் உருவாகும் கொழுப்பு, சதைகள் கரையும்.
4. உடலுக்கு திடகாத்திரத்தையும் உள்ளத்திற்கு மிகுந்த உறுதியையும் தருகிறது.
5. உடலின் கட்டமைப்பை பாதுகாப்பதற்கு மிகவும் சிறந்த ஆசனம்.

## தலைவலியும் - காரணங்களும்

பொதுவாக நம்மில் பலர் அதிகமாகச் சொல்வது "தலைவலியால் அவதிப்படுகிறேன்" என்பதை தினமும் கேள்விப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் அநேகமானோருக்கு இந்த தலைவலி வருவதன் காரணங்கள் எவையெவை என்பதை நினைத்துப் பார்ப்பதோ அன்றி தெரிந்து கொள்வதோ கிடையாது.

தலைவலி வந்ததும் மாத்திரைகளை நாடுகின்றனர். அது அடிக்கடி வரும்போது மருத்துவ சோதனை செய்து பார்க்கின்றனர். தலைவலி பல காரணங்களால் உண்டாகின்றது. மலச்சிக்கல், மூளையில் கட்டி, சிறுநீரக கோளாறு, நீரிழிவு நோய், இரத்தக் கொதிப்பு, ஒவ்வாத மருந்துகளைப் பாவிப்பது, அதிக நேரம் வெயிலில் நிற்றல், நேரம் தவறி உணவு உட்கொள்ளல், தூக்கம் குறைதல், உணவு செரியாமை, பெண்களைப் பொறுத்தவரை மாதவிடாய் கோளாறு, சிலருக்கு உடல் உறவுக்கு பின்பு.

இப்படி பல்வேறுபட்ட காரணங்களால் தலைவலி உண்டாகிறது. ஆகவே என்ன காரணத்தால் இது உண்டாகிறது என்பதை அறிந்து அதற்குரிய சிகிச்சை செய்யவேண்டும்.

சிலருக்கு குளிர் காலத்தில் குளிர் காற்றுப்பட்டாலோ, காலையில் குளிரில் நடந்து போனாலோ தலைவலி வரும். இவர்களுக்கு குளிர்காற்று ஒத்துக் கொள்ளாது அதுபோல சிலருக்கு சளி பிடித்தாலே தலைவலி வரும். மேலும் சிலருக்கு வாசனைப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருட்களை மணந்தாலோ தலைவலி உருவாகும். அடுத்ததாக ஒரு முக்கிய விஷயம் சிலருக்கு தலைவலிதான் அவர்களுக்கு வரும் பிறிதொரு நோயின் அறிகுறியாக விளங்குகின்றது. அதாவது இரத்த அழுத்தம், காச்சல், போலியோ, காலரா, மனநோய் போன்ற நோய்களின் அறிகுறி தலைவலியே.

அத்துடன் தலைவலி வரும்போது மாத்திரைகளை உபயோகிப்பதை விடுத்து, அதன் காரணங்களை முதலில் கண்டறிந்து அதற்கேற்ற மருத்துவ முறையை அணுகுவதே சிறந்தது.

## யோகாசன வகுப்பு

கனேடிய இலங்கை பட்டதாரிகள் சங்கத்தின் சார்பில் கடந்த 3 வருடங்களாக அனுபவமிக்க ஆசிரியரால் பிரதி ஞாயிறுதோறும் காலை 7:30 மணிக்கு Markham /Ellesmere இற்கு அருகாமையில் வோபன் கொலிஜியேற்றில் (Woburn Collegiate) நடாத்தப் பட்டு வருகின்றது.

மேலதிக தொடர்புகளிற்கு - சத்தி: **291-5853**


**Neelam SILK**

வட அமெரிக்காவில் உயர்ந்தரப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை

**நீலம் சில்க்**

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 8வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும் நீலம்சில்க்

- கிரிஜாவின் செளந்தர்யா ரை அன் டை (Tie & Die) சாறி
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்



கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)

CALL: (416) 778- 7455
FAX: (416) 778-8484



| | | | |
|---|---|---|---|
| கிரகப் பொருத்தம் பார்த்தல் | 3 | 4 | சாதகக் குறிப்பு கணித்தல் |
| ல | யோ கா சோ தி ட ம் | (416) 299-8361 | 6 |
| 12 | | | எண்சோதிடப்படி ஆலோசனை கூறுதல் |
| சுபமுகூர்த்தம் கணித்தல் | | | பலன் பார்த்தல் |
| | 10 | 9 | |






**ஞானம்ஸ் ஸ்ருடியோ**

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12
Professional Photographer - கதிர்
☎: (416) 750-8118
2425 EGLINTON AV. E. UNIT 3
KENNEDY/ EGLINTON, SCARBOROUGH



**SNR OPTICAL**

அனைத்து டிசைனர் பிறேம்ஸ் மற்றும் கண்ணாடிகள் (Designer Frames & Sunglasses) மேலும் சகல திருத்த வேலைகள் சிறந்தமுறையில் அனுபவமிக்கவரால் செய்துகொள்ள தொடர்புகொள்ளவும். *அரசாங்க உதவியில் உள்ளவர்கள், மற்றும் அனைத்து காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
* 60 வயதிற்கு மேற்பட்டவர்களிற்கு சில வசதிகளுமுண்டு.

ரதி - FRAME CONSULTANT (Robert Optician)
☎: (416) 332 9995




**OODAM MAINTENANCE WORKS**

Janitorial Services ("Sanitation for the Nation")
* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING
>Railing > Fencing >Welding

Free Estimates
Pl. Call: Thamby - TEL./Fax: (416) 638-2796
18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

# நீரிழிவு ஒரு நோயா?

**-ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி, பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்**



உணவுக்கட்டுப்பாட்டால் நாங்கள் நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம். 40 வருடங்களிற்கு மேலாக சக்கரை நோயாளிகள் எதுவித மருந்தும் இல்லாமல் உணவுக் கட்டுப்பாட்டால் அவர்கள் சுகமாக வாழ வழிசெய்துள்ளோம். 21ம் நூற்றாண்டில் இந்த நீரிழிவு நோய்க்கு பூரண தீர்வு காண்பதற்கு அதாவது இன்சுலினை சுரக்கும் பன்கிறியஸ் எனப்படும் கணையத்தை மீண்டும் நம் சித்தர்கள் காட்டிய வழிமுறையில் ஆராய்ச்சி செய்து வெற்றி அடையும் நிலையில் உள்ளோம். உலகத்தமிழ் ஜோதிட வைத்திய மையத்தில் ஆய்வு செய்து சித்தர்கள் கூறிய மூலிகைகளின் மூலம் மீண்டும் இறந்த கணையத்திற்கு புத்துயிர் அளித்து இரத்தத்தில் உள்ள சர்க்கரையை சமப்படுத்தி உலகிலேயே இந்த நோய் அடியோடு இல்லாமல் செய்வதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறோம். இதில் நாம் வெற்றிபெற்றால் இவ் முழு பெருமையும் நம்முன் வாழ்ந்த மருத்துவ மாமேதைகளுக்கேயாகும். நம்முன்னோர்கள் காட்டிய வழியாகிய "மருந்தே உணவு, உணவே மருந்து" என்று வாழந்திருந்தால் இன்று நமக்குள் எத்தனையோ பேர் நோய் வராமல் காப்பாற்றப்பட்டிருக்கலாம்.

சர்க்கரை நோய் உள்ளவருக்கு விழி ஆடி விழுப்பு என்கின்ற (Cataract) நோய் ஏற்படலாம். அத்தோடு கண் அழுத்த நோய் (Glaucoma) ம் 50 வயதிற்கு மேல்வருவதற்கு சந்தர்பம் உண்டு. இரண்டு நோய்களும் கல்சியம் குறைவாக இருப்பதனால் வருகிறது. சாதாரணமாக அடிபட்ட காயங்கள், அகச்சிவப்பு கதிர்வீச்சு (Infra-Red Radiation) போன்ற காரணங்களால் மூப்பெய்த முன்னரும் இந்நோய் வரலாம்.

கீழ்வரும் கட்டுரையில் நீரிழிவு நோய் எப்படிக் கண்ணைத் தாக்குகிறது என்பதை தெளிவாக எழுதுகிறேன். எண்சாண் உடம்பிலும், சிரசே பிரதானம். அதிலும் கண்மணியான பார்வையை இழந்துவிட்டால் உலகமே இருண்டு விடும். ஆகவே முன்எச்சரிக்கையான பாதுகாப்பது மிகமிக அவசியம்.

Glaucoma என்கின்ற கண்ணழுத்த நோயானது பொதுவாக கணிசமான அளவு மக்களை அதுவும் வெப்பநாடுகளில் வெளியில் சென்று வேலைசெய்யும் 45 வயதிற்கு மேற்பட்டவர்களை தாக்கும் ஒருவித கண்நோய் ஆகும். இது தொற்றுநோய் அல்ல. இந்நோய் கண்களுக்கு அதிக வேலை கொடுப்பதாலோ அல்லது உணவுச் சத்துக் குறைவினாலோ அல்லது நவீன முறையான விழியொட்டு ஆழியினாலோ உண்டாவதுமல்ல. (Optic Nurse) கண்அமைப்பிலான நரம்புகள் பாதிப்படைவதே உண்மையில் இந்நோய் ஆகும். ஆகவே கண்ணின் நரம்பிழப்பிற்கேற்பவே அழுத்த அளவும் ஏற்படுகிறது. இந்த இடத்திலே நாம் ஒன்றை உற்று நோக்க வேண்டும். ஆண்டவன் மனிதனுக்களித்த அருமையான பொக்கிஷமும் ஜீவாமிர்தமும் இரத்தமாகும். இந்த இரத்தத்தை இயன்றளவு கொழுப்பு, உப்பு, சர்க்கரை இதமாக இருக்க உடலைப் பழக்கிக் கொண்டால் நாம் எந்த விதமான நோயுமில்லாமல் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாக 100 ஆண்டு காலம் வாழமுடியும். இதிலே நான் சர்க்கரை வியாதியைப் பற்றித்தான் எழுதிக்கொண்டிருக்கிறேன். சர்க்கரை நோய் இருப்பது தெரிந்தும் மனக்கட்டுப்பாடு இல்லாமல் விரும்பம்போல் ஆகாத உணவை உண்பவருக்கும், இன்சுலின் என்ற மருந்தை பாவிப்பவர்களுக்கும் 50 வயதளவில் கண்ணின் மென்மையான இழையங்களையும், கண்ணின் கருமணியையும் பெரும்பாலும் தாக்கி அழிக்கின்றது. நான் எழுதிக்கொண்டிருக்கும் Glaucoma -Cataract போன்ற கண்நோய் மட்டுமல்லாது சர்க்ரை நோயை கவனியாமல் மிகவும் முற்றிப்போன தறுவாயில் சிலர் கண் பார்வையை பூரணமாக இழந்ததையும் நேரடியாக கண்டுள்ளோம். குறிப்பாக Glaucoma என்கின்ற இந்நோய்தான் முக்கியமாக முதிர்ந்த வயதில் பார்வை இழக்க காரணமாகிறது. அனேகமாக இந்நோயை அறிவதற்கு அறிகுறிகள் தென்படுவது இல்லை. இவ் வியாதி முற்றிய நிலையில் கண்மங்கலாக, பார்வைக் குறைவு ஏற்படும் பொழுது தான் ஒருவரால் உணரப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் அளவுக்கு மிஞ்சிய அழுத்தம் இருந்தால் பார்வையை பாதிப்படைய செய்யும். இவ்வியாதியால் அறுவைச் சிகிச்சை கூட அநுகூலமற்றுப் போய்விடும். கருவிழிக்கு பின்புறமாக தொடர்ந்து ஊற்றெடுக்கும் திரவம் கண்விழிமூலமாக வெளிவரும் தன்மையுடையது. இந்தக் குழாய்களின் வழியாக பாய்கின்ற இரத்தத்தை (Blood Pressure) எப்படி அளக்கின்றோமோ அப்படியே கண்ணின் அழுத்த அளவையும் இதற்கென உள்ள கருவியால் (Tonometer) ஆல் கணிப்பிடலாம். இந்நோய் வராமல் தடுப்பதற்கு உரிய கண் மருத்துவர் ஆலோசனையை நாடுவது மிகவும் அவசியம். ஆகவே 45 வயதை தாண்டியவர் ஒவ்வொருவரும் தமது கண்ணை பரிசோதனைக்கு உட்படுத்துவது மிகவும் அவசியமாகும்.


நான் ஒரு
வழக்கறிஞர் இல்லை




குடிவரவுச் சட்டம்
Immigration Law

குற்றவியல் சட்டம்
Criminal Law

குற்றவியல் தண்டனை
பெறுவதனால்....



உங்கள் வதிவிட உரிமை
- Permanent Resident
குடியுரிமை
- Citizenship
குடும்ப ஒன்றிணைவு
- Family Sponsorship
பாதிக்கப்படலாம்.



வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?

அடுத்து
செய்யவேண்டியது என்ன?



முதலில்
வைத்தியசாலைக்கு
செல்லுங்கள்...

பின் இவரை அழையுங்கள்...



எஸ்.கே. தீசன்
(416) 631-6322


## நினைவில் நிலைத்து நிற்கவேண்டியவை

1. சுதந்திர அரசுகளின் பொதுநலவாய (Commonwealth of Independant States) அமைப்பில் எத்தனை நாடுகள் உண்டு?
   ரஷ்யா உட்பட பதினைந்து (15)
2. உலகில் அதிபரந்த அளவு குகை அமைப்பு (Most Extensive cave System) எங்கே அமைந்துள்ளது?
   ஐக்கிய அமெரிக்காவிலுள்ள கென்ரெக்கியில் (Kentucky, U.S.A.)
3. டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் எந்நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார்?
   இந்தியா (India)
4. வானொலி, தொலைக்காட்சி, றெய்டார் (Radar) ஆகியவை உருவாவதற்கு மின்காந்த கதிர்வீச்சைக் (Electro Magnetic Radiation) கண்டுபிடித்தவர் யார்?
   ஹைன்றிச் றுடொர்.'.ப் ஹேர்ற்ஸ் (Heinrich Rudolf Hertz
5. உலகில் அதிநீண்ட நதி எது?
   நைல் நதி (River Nile)
6. சர்வதேச ஒலிம்பிக்குழு (International Olympic Committee( I.O.C) வின் தலைவர் யார்?
   யுவான் என்ரோனியோ சமறான் Juan Antonio Samaranch)
7. மெசெப்பத்தோமியா (Mesopotamia) என்றழைக்கப்பட்ட புராதன நாகரீக நாடு தற்போது எந்நாட்டின் பகுதியாக இருக்கிறது?
   இராக் (Iraq)
8. உலகில் அதிநீண்ட மதில் /சுவர் எந்நாட்டிலுள்ளது?
   சீனா (China)
9. உலகின் அதிபாரிய பரப்பளவு கொண்ட நன்னீர் ஏரி எங்குள்ளது?
   வட அமெரிக்காவில் (North America)
10. உலக அதிபார குத்துச் சண்டை (World Heavyweight Champion) வெற்றிவீரர் யார்?
    மைக் ரைசன் (Mike Tyson)

*-A. Arunthavarajah*


AIRPORT SERVICE &
MOVING VAN



ஏயர்போட்டிற்கு பிரயாணிகள்
போய்வருவதற்கான
சேவைகளும்,
மற்றும் பொருட்களை
இடமாற்றம் செய்வதற்கான
சேவைகளிற்கு

☎: (416) 759-0557



IMMIGRATION
CONSULTANT
Christina Staden, M.A.

Member of the Association of Immigration
Counsel of Canada
18 years experience

Free assessment,
LOW COST,
money back guarantee
*INDEPENDENT ★ BUSINESS ★FAMILY
★HUMANITARIAN ★STUDENT

Tel. Toronto (416) 222-5254
Mississauga (905) 501-0307
9AM.-9P.M.



TAMIL INSURANCE CLAIMS
CONSULTANT
தமிழில் இலவசஆலோசனை

வாகன விபத்து அல்லது வீடு
விபத்து ஏற்பட்டால் என்ன
செய்ய வேண்டும்?

※ தகுந்த ஆலோசனை
※ சட்ட உரிமைகள்
※ விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடு
※ உரிய நஷ்டஈடு
※ மற்றைய இழப்பீடு
※ மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும், அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்தமுறையில் பெற்றுக்கொள்ள

ரவி நடராஜா (12 வருட காலம் அனுபவமுள்ளவர்)
தொடர்புகொள்ளுங்கள்: TEL: (416) 245-6555
FAX: (416) 245-7766
2095 Weston Rd., #201 (South of HWY 401),
Toronto, Ont. M9N 1X7

நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU

Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்பாளர்களின் தரமான பொருட்களின் அணியில், மேலும் ஒரு நாவிற்கினிய படைப்பு!

இதோ!




நிரு பிராண்ட் பரிசுத்திட்டத்தின் கீழ் கெட்டிப்பால் லேபல்களுக்கு 10 புள்ளிகள் வழங்கப்படும்.

நிரு பிராண்ட் "கெட்டிப்பால்"

சுவையின் தரத்தை ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள்

தரமான நிரு பிராண்ட் தயாரிப்புகள் கனடிய சுகாதார விதிகளுக்கமைய தயாரிக்கப்படுபவை.

சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

Niru Enterprise Inc., Scarborough, Ontario Tel: (416) 750-1976

நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU

சூரியக்குடும்பம் 2

# விண்வெளி

சூரியக் குடும்பம் என்ற இப்பகுதியில் நாம் சூரியன், அதன் ஒன்பது கோள்கள், பரவிக் கிடக்கும் வால்வெள்ளிகள் போன்றவற்றைப் பற்றிப் பார்ப்போம். பிரபஞ்சத்தில் நமது சூரியத் தொகுதியானது மிகமிகச் சிறியதான ஒரு பகுதியையே கொண்டுள்ளது. நம்மால் அவதானிக்கப்படக்கூடிய பிரபஞ்சத்தின் $1/10^{30}$ பங்காகவே நமது சூரியக்குடும்பம் இருக்கலாம் என்பது ஆய்வாளர்களது கணிப்பு. இவ்வளவு சிறியதான சூரியக்குடும்பத்தைப் பற்றி பல காரணங்களுக்காக நாம் அறிய வேண்டியுள்ளது. அதில் பிரதானமான காரணம் என்னவெனில் இப்பிரபஞ்சத்தில் சூரியக்குடும்பமே எமது வீடு போல் காணப்படுகிறது. இதனை அறிவதன் மூலம் மற்ற நட்சத்திரங்களை, அவற்றினைச் சுற்றிவரும் எமது கண்களுக்குப் புலப்படாத அவற்றின் கோள்களின் இயல்புகளை கூட ஓரளவுக்கு நம்மால் அறிய முடியும் இப்பகுதியின் முடிவில் எவ்விதம் நமது சூரியக்குடும்பம் உருவானது, எவ்வளவு காலத்திற்கு முன் தோன்றியது, அதன் அமைப்பு கோள்களின் நிலை அவற்றின் இயல்புகள் போன்ற பல விஞ்ஞான ரீதியான அறிவினை நாம் பெற்றிருப்போம் என்பது எமது எண்ணம். தொடர்ந்து இப்பகுதியினை வாசிப்பதன் மூலம் தெளிவான விளக்கத்தைப் பெறமுடியும் என்பது எனது எண்ணம். ஆயினும் இது ஒரு ஆய்வு அடிப்படையில் அமைந்த கட்டுரையே. வாசகர்களாகிய நாம் எம்மையும் இவ் எளிய ஆய்வில் ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் நமது அறிவியல் நிலையை வளப்படுத்திக் கொள்ளலாம்.

முதலில் நமது சூரியத்தொகுதி எவ்விதம் உருவானது எனப் பார்ப்போம். முதலில் சூரியன் பெரிய ஒரு கோளப்பந்தாகத் தோன்றியது. காலத்திற்குக் காலம் சூரியனின் அபரிமிதமான பருமன் காரணமாகவும் அதன் சுழற்சியின் காரணமாகவும் சிறுசிறு பகுதிகள் சூரியனில் நின்றும் வெளித்தள்ளப்பட அவை சூரியனுக்கு வெளியே குளிர்ந்து கோள்களாக சூரியனை வலம் வர தொடங்கின. ஆரம்ப காலத்தில் ஒரு சிலரால் முன்வைக்கப்பட்ட கொள்கையிது. இன்றும் கூட சிலரது மனதில் இந்தக் கொள்கையே உள்ளது. ஆனால் இது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்று அல்ல. இதில் பல குறைகள் காணப்படுகின்றன. முதலில் சூரியன் ஏன் காலத்திற்குக் காலம் சிறுசிறு பகுதிகளை வெளித்தள்ள வேண்டும்? அவற்றின் பருமனையோ அல்லது சுழற்சியையோ காரணம் கூறமுடியாது. ஏனெனில் இன்றும் கூட நமது சூரியனைவிடப் பலமடங்கு பெரிய நட்சத்திரங்கள் விண்வெளியில் வலம் வருகின்றன. நட்சத்திரங்கள் காலத்திற்குக் காலம் சில வெளித்தள்ளல்களைச் செய்வதுண்டு.. ஆனால் அவை கோள்கள் உருவாகக்கூடிய அளவுக்கு பெரிய அளவில் இல்லை. அத்துடன் அவற்றின் வெளித்தள்ளல்களில் அயன்வடிவிலான ஐதரசன்களும், இலத்திரன்களுமே அதிகம் காணப்படும். இவை ஒன்று திரண்டு கோள்கள் ஆவதற்குச் சாத்தியங்கள் இல்லை. இனி கோள்கள் எல்லாம் சூரியனின் வெளித்தள்ளல்களே ஆயின் ஓரளவுக்கேனும் அவற்றின் பௌதீக இயல்புகள் ஒன்றாக காணப் படவேண்டும். ஆனால் கோள்களின் பௌதீக இயல்புகள் அமைப்புக்கள் என்பன வெவ்வேறாகக் காணப்படுகின்றன. அடுத்து காலத்திற்குக் காலம் வெளித்தள்ளல்களினால் தான் கோள்கள் எல்லாம் உருவாகின எனக் கருதினால் கோள்களின் வயதுகள் வேறுபட்டவையாகக் காணப்பட வேண்டும். ஆனால் கதிரியக்க ஆய்வுகளின் அடிப்படையில் நிர்ணயித்த கோள்களின் வயது (சூரியனுக்கும் சேர்த்து) ஏறக்குறைய ஒன்றாகவே காணப்படுகிறது. அதாவது கோள்கள் யாவும் சமகாலத்திலேயே தோன்றியவை என்றாகிறது.

இதுபோன்ற பல முரண்பாடுகளைக் கொண்டுள்ள காரணத்தால், சூரியனின் வெளித்தள்ளல்களால் தான் கோள்கள் உருவாகின என்ற கொள்கை எடுபட முடியவில்லை. அண்மையில் Hubble தொலைகாட்டி நட்சத்திரம் ஒன்றின் வெளித்தள்ளல் ஒன்றை படம் பிடித்துக் காட்டியது. கணிசமான அளவு பெரிய வெளித்தள்ளல்கள் ஆன அது அந்த நட்சத்திரத்தினைச் சுற்றிப் பிரகாசமான ஒரு வளையம் வடிவில் நட்சத்திரத்தை விலத்தி மிகப்பெரிய கதியில் செல்கின்றதை Hubble தொலைக்காட்டியின் படங்கள் காட்டுகின்றன. இவை விண்வெளியில் எங்கோ தொலைவில் தூசுக்களாக தொலைந்து விடுமே தவிர ஒருபோதும் கோள்களாக முடியாது என்பது விஞ்ஞானிகளின் கூற்று.

சரி சூரிய வெளித்தள்ளல் கொள்கை பிழை எனில் எவ்விதம் சூரியத் தொகுதி தோன்றியிருக்கலாம்? ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய சரியான காரணங்களைக் கூறும் Solar Nebula என்ற சூரிய தூசுக் கொள்கை பற்றி அடுத்த தடவையில் பார்ப்போம்.

Ultra Graphic

"Your Ideas Take Best Shape"

Other Services:
- Art Works
- Rubber Stamps
- Lamination
- Certificates
- Foil Printing
- Calenders
- Laser Colour Prints

Anything you like to Desig & Pri

றோல் லேபல்

Label on Roll | Tags | Labels | gs | Price Tags | Bumper Stickers | One Colour to Four Colour

Short Quantitie
Large Quant
Labels, Price T
Business C
Tic
Bumper Stic

Call: Lo

Tel: (416) 282-5859

## நிதியும் மூலதனமு

3. BUY & HOLD-பொறுமையே பெருன அளிக்கும் மிக சிறந்ததொரு சாதனமா உ+மாக எந்த ஒரு சிறந்த Stock ம் உடனடியாக மிக உயர்ந்த பெறுமதியை தரமுடியாது. ஆகவே நீங்கள் ஒரு Stoc உங்கள் Plan ன் படி வாங்கியிருந்தால் அதனை விற்பனை செய்யாது நீண்ட காலத்திற்கு வைத்திருப்பதனாலே தான் அதன் பலனை பெற முடியும்.

4. BE A REALIST - DIVIDENDS, INT EST, CAPITAL GAINS எல்லாம் உங் மூலதனத்தை அதிகரிக்கிறது. ஆகவே உங்களின் மூலதன திட்டமும் உங்கள் Priorities மட்டுமே உங்கள் மூலதனத் கொண்டு நடத்த வேண்டும். ஆகவே ஆல் வரும் சிறு இழப்புகளை அதிக செலுத்தாதிருப்பதே நல்லது. -J

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

*-தொகுத்துத் தருபவர் - பரம்*

### 1954

1. அந்தநாள்*
2. அம்மையப்பன்
3. இல்லற ஜோதி
4. என் மகன்
5. எதிர்பாராதது
6. கனவு
7. கல்யாணம் பண்ணியும் [பி]ரமச்சாரி
8. [கூண்]டுக்கோட்டை
9. குடும்பம்
10. கூண்டுக்கிளி
11. சந்ரஹாரம்
12. சுகம் எங்கே
13. சொர்க்கவாசல்
14. துளி விஷம்
15. தூக்கு தூக்கி
16. நண்பன்
17. நல்லகாலம்
18. பத்மினி
19. பணம் படுத்தும் பாடு
20. புதுயுகம்
21. பெண்
22. பொன்வயல்
23. போனமச்சான் திரும்பி வந்தான்
24. மலைக்கள்ளன்
25. மனோகரா
26. மதியும் மமதையும்
27. மாங்கல்யம்
28. ரத்தக்கண்ணீர்
29. ரத்தபாசம்
30. ராஜீ என் கண்மணி
31. விடுதலை
32. விளையாட்டு பொம்மை
33. வீரசுந்தரி
34. வைரமலை

1954ம் ஆண்டு 34 தமிழ் படங்கள் வெளிவந்தன. இப்படங்களில் பல படங்கள் சாதனைகள் புரிந்த படப் பட்டியலின் சரித்திரப்புத்தகத்தின் பக்கங்களை மிளிரச் செய்கின்றன. இந்த ஆண்டு தயாரிக்கப்பட்ட "அந்தநாள்" என்ற படம் முதல முதலாக பாடல்கள் இல்லாத தமிழ் படமாக தயாரித்தது ஒரு சாதனையாகும். பேசும் தமிழ்ப் படம் ஆரம்பமாகிய காலங்களில் நடக்கும் போதும், சிரிக்கும் போதும் இருக்கும போதும் எப்பொழுதும் பாடல்களாலேயே படத்தை நகர்த்தும் ஒரு காலத்தில், பாடல்களே இல்லாமல் ஒரு படம் எடுத்தது ஒரு விஷப்பரீட்சை. பிற்காலத்தில் 'புன்னகை' என்ற படமும பாடல்கள் இல்லாமல் வெளிவந்தது யாவரும் அறிந்தது.



'கூண்டுக்கிளி'

இவ்வருடம் சிவாஜி அவர்கள் 8 தமிழ்ப்படங்களில் நடித்துள்ளார். இவ்வருடத்தில் வெளியாகிய "கூண்டுக்கிளி" என்ற படத்தில் சிவாஜியும், எம்.ஜி.ஆரும் சேர்ந்து நடித்துள்ளார்கள். இந்த ஒரு படத்தில் மட்டுமே இந்த இருதுருவங்களும் சேர்ந்து நடித்துள்ளார்கள். இதுவும் ஒரு அபூர்வ சங்கமம் ஆகும்.

இன்றும் சிவாஜியின் வசனத்தைப் பற்றிப் பேசும் "மனோகரா" என்ற படமும் இந்த ஆண்டிலே வெளியாகியது மற்றய சிறப்பாகும். இவ் ஆண்டு எம்.ஜி.ஆர் நடித்த படங்கள் இரண்டு . ஒன்று மலைக்கள்ளன் மற்றது கூண்டுக்கிளி. இப படம் எம்.ஜி. ஆரின் 35 வது படமாகவும் சிவாஜியின் 17வது படமாகவும் வெளிவந்தது. அன்றைய காலத்தில் இரு நடிகர்களினதும் ரசிகர் ஒன்றாக பார்க்க கூடியதாக இருந்த ஒரே ஒரு படம் கூண்டுக்கிளி. என்ன காரணமோ, நேரமோ பின் எந்தக் காலத்திலும் சிவாஜியும், எம்.ஜி.ஆரும் ஒன்றாக படத்தில் நடிக்காமலே சினிமா உலகம் காலத்தை நகர்த்தி விட்டது.



'மலைக்கள்ளன்'- பி. பானுமதியுடன

6 மொழிகளில் தயாரான 'மலைக்கள்ளன்'



எம்.ஜி.ஆர் - பானுமதி நடித்த **மலைக்கள்ளன்** என்ற படம் 6 மொழிகளில்தயாரானது. அவையாவன தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி மற்றும் சிங்களம் ஆகும். மேலும் இந்திய அரசின் வெள்ளிப்பதக்கம் பெற்ற முதல தமிழ்ப் படமும் இதுவே.

இவ்வாண்டு சினிமா ரசிகர்கள் சங்கம் தெரிவு செய்த சிறந்த தமிழ்ப படம் அந்தநாள். சிறந்த நடிகர், நடிகைகள் முறையே சிவாஜி (தூக்கித் தூக்கி படத்திற்காக) [ப]த்மினி ஆகும்.

## நான் வாழப் போகிறேன்

-வீணை மைந்தன்

### சுவடு 24

அறிஞர் அண்ணா, காமராஜர், கண்ணதாசன், கலைஞர், ராஜாஜி, காஞ்சிப் பெரியார், எம்.ஜி.ஆர், இந்திராகாந்தி இவர்களுடன் எல்லாம் பழகுவதற்கும் பேசுவதற்கும் நட்புறவு கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைக்குமா என்று ஏங்கியவன் நான். அது மட்டுமா வடநாட்டின் புகழ் பெற்ற கலைஞர்களான அசோக்குமார், திலிப்குமார், ராஜ்கபூர், லதா மங்கேஷ்கர் என்று பல்வேறு புள்ளிகள். இப்படியாக உலக நாடுகள் பலவற்றிலும் பெரிய பெரிய தலைவர்களினதும் பிரபலமானவர்களினதும் அன்பையும் நட்பையும் பெற்ற பெருமைக்குரிய ஒரு மாமேதையின் அருகே உட்கார்ந்து உரையாடிய போதும், அவரே எனக்குப் பக்குவமாகச் சிற்றுண்டிகளை எடுத்து வைத்து அன்புடன் உபசரித்த போதும் மேற்கூறிய தலைவர்களையும், கலைஞர்களையும் ஒரு உருவில் பார்த்தது போன்ற ஒருவித பெருமிதம். காரணம் மேற்கூறிய அத்தனை தலைவர்களையும், கலைஞர்களையும் தன்பால் கவர்ந்திழுத்த மேதையின் அருகே இருப்பதை உணர்ந்து எனக்குள் நான் ஆச்சரியப்பட்டுப் போனேன்.

எங்கள் வருகை பற்றி செக்கியூரிட்டியிடம் சொல்லியிருப்பார்கள் போலும். நண்பர் அப்துல் ஹமீதும் நானும் வந்த வண்டியைப் பார்த்ததுமே மெயின் கேட் வாசலில் காவலில் இருந்த பணியாள் கதவுகளைத் திறந்து எங்களை உள்ளே அனுமதித்தார்.

'ஐயா மேல இருக்கிறார்' ஹாலில் உட்காருங்கள் என்று பணியாட்கள் உபசரித்தனர். எங்கள் வருகை அறிவிக்கப்பட்டதும் ஒருவர் மாடியிலிருந்து கீழே வந்து "ஐயா உங்களை மேலேயே கூட்டிவரட்டாம்" என்று அழைத்துப் போனார்.

மேலே என்றதும் மேல் மாடியில் உள்ள ஹாலில் என்று தான் நாம் நினைத்தோம். "வாங்க, ஐயா உள்ளே பெட்றூம்ல இருக்கிறார். டி.வி.ல கிரிக்கெட் நடக்குது, பார்த்துக்கிட்டிருக்கார்" அப்போது நண்பர் ஹமீது என்னிடம் காதில் சொன்னார், "நானும் இங்கு எத்தனையோ தடவை வந்திருக்கிறன் ஒரு நாளும் என்னை பெட்றூம் வரை அழைத்ததில்லை. நீங்கள் புதியவர், ஆனாலும் பெட்றூமிற்குள்ளேயே அழைக்கிறார். நீங்கள் தான் சிவாஜி ரசிகர்" என்று எனக்கு மகிழ்வூட்டினார்.

நடிகர்திலகம் அவர்களுடைய இருப்பிடங்களுள் சென்னை போக் ரோட்டில் (இப்போது செவாலியர் சிவாஜி கணேசன் சாலை) உள்ள 'அன்னை இல்லம்' மிக முக்கியமானது. இங்குதான் அவரது கலையுலக வாழ்வும் வளமும் கதையாகி வளர்கிறது. கூட்டுக் குடும்ப உறவுகளை வளர்த்து வருவதால் 'அன்னை இல்லம்' பல வசதிகளைக் கொண்ட இருப்பிடம். பிரபு, ராம்குமார் மற்றும் அவரது சகோதரி பிள்ளைகள், தம்பி பிள்ளைகள், அண்ணன் தங்கவேலுவின் பிள்ளைகள், மகள் சாந்தி குடும்பம், பேரப்பிள்ளைகள் என்று பல அங்கத்தவர்கள் வாழும் ராஜமாளிகை அது.

படுக்கை அறையில் ஒரு மூலையில் இருந்த மரக்கிளையில் மாட்டியிருந்த பல்வேறு வடிவத் தொப்பிகள் தலைப்பாகைகள் என்னைக் கவர்ந்தன. வ.உ.சியாக வேடமிட்டு அணிந்த தலைப்பாகை, எங்க ஊர் ராஜா தலைப்பாகை, இருவர் உள்ளம் படத்தில் பறவைகள் பலவிதம் என்று பாடும்போது அணிந்த தொப்பி என்று பல்வேறு திடைப்படங்களிலும் அவ்வப்போது அணியப்பெற்ற தொப்பிகளும், தலைப்பாகைகளும் அந்த மரக்கிளைகளில் மாட்டியிருந்ததைப் பார்த்தேன்.

சிவாஜி ஒரு கிரிக்கட் பிரியர். நாங்கள் போயிருந்த வேளை அவர் டிவியில் கிரிக்கட் பார்த்து இரசித்திக் கொண்டிருந்தார். 'வாங்க, உட்காருங்கள்' டேய் பசங்களா ஐயாவுக்கு வணக்கம் சொல்லுங்கடா" என்று பேரப்பிள்ளைகளுக்கு உத்தரவிட்டார். மகள் சாந்தி, ராம்குமார், பிரபு எல்லோருடைய பிள்ளைகளும் அங்கு தாத்தா சிவாஜியுடன் கிரிக்கெட் ஆட்டத்தைப் பார்த்து மகிழ்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.


இயக்குனர் சி.வி. ராஜேந்திரன் சிவாஜி அவர்களின் ரேஸ் கிளப் அங்கத்துவம் பெயரில் ஏதோ காரியம் ஆக வேண்டி வந்து வாங்கிக் கட்டிக் கொண்டிருந்தார். அவரும் எப்படியாவது காரியம் ஆகவேண்டும் என்று அண்ணே... அண்ணே எனச் சிவாஜியைத் தாஸா பண்ணிக் கொண்டிருந்தார்.

'டேய் புள்ளைங்களா உங்க பெயரையும், படிக்கிற வகுப்பையும் ஐயாவுக்குச் சொல்லுங்கடா" பேரப்பிள்ளைகள் தாத்தாவின் வார்த்தைக்கு மதிப்பளித்து ஒவ்வொருத்தராக பெயர் தந்து பள்ளிக்கூட படிப்பு விபரம் சொன்னார்கள்.

"இவர் தான் என்னுடைய முதலாவது சன்இன் லோ, மிஸ்டர் நாராயண சாமி. ஜேர்மனில படித்தவர் என்ஜினியர்" என்று குடும்பத்தின் மூத்த மருமகனாரை (மகள் சாந்தியின் கணவர்) கம்பீரமாக அறிமுகம் செய்து வைத்தார்.

ஒரு விடயத்தை நினைவு கூர்ந்தேன். ஆனந்த விகடனில் ஒரு சமயம் ஒரு திருமணம் எப்படி நடைபெற வேண்டுமென உங்கள் மகளின் (சாந்தி-நாராயணசாமி திருமண வைபவம்) திருமண விழா பற்றிச் சிறப்பாக குறிப்பிட்டிருந்தார்கள் என்று நினைவு படுத்தினேன்... 'அட அதை விடுங்கய்யா...! ஒரு மருமகன் எப்படி இருக்க வேண்டும் என உதாரணமாக என் மாப்பிள்ளை இருக்கிறார் ஐயா" என்று குடும்பத்தின் மூத்த மருமகனைப் பெருமையுடன் பார்க்க.... அவர் மிக அடக்கமாக எங்களை அன்புடன் குசலம் விசாரித்தார்.

அடுத்த தொடரில்...

**ELECTRICAL REPAIRS**

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும்,சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ் - ☎ **261-6883**

**RAAJ WATCH WORK**




சகல விதமான மணிக்கூடுகளும் **(Watch & Clock)** குறைந்த கட்டணத்தில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் திருத்திக் கொள்வதற்கு நகரில் நாட வேண்டிய ஸ்தாபனம்.

**NATHAN ☎: (416) 265-5580**

2885 LAWRENCE AVE. EAST , BRIMLY/ LAWRENCE (Close to Biway)

**TV & VCR**





**ALL MAKES- TV'S, VCR'S CAMCORDERS, STEREOS**

***MOST REPAIR DONE IN YOUR HOME***

**FAST SERVICE**

Pl Call.: **MAHENDRAN** B.Sc. Exp. Tech. **(416) 286-8990**

அன்பான கவிபாடும் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பால் எம்மண்ணைப், தாய், தந்தை, சகோதர, சகோதரிகளை பிரிந்து இன்று கனேடிய மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும், பெண்கள் பற்றி வெளிவர இருக்கும் ஒரு கவிதைப்புத்தகம் ஒன்றிற்கு உங்கள் முழு ஆதரவு தேவைப்படுகிறது. புத்தகத்தின் தலைப்பு "தமிழ்ப் பெண்ணும் கனேடிய மண்ணும்" நீங்கள் உங்கள் கவிதைகளுக்கு தலைப்பிட்டு அனுப்பலாம். எல்லாக் கவிதைகளும் புத்தகத்தில் வெளிவரும். அதில் மூன்று முதல் கவிதைகளுக்கு பரிசுப் பொருட்கள் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். நீங்கள் உங்கள் கவிதைகளை அனுப்பவேண்டிய முகவரி K.S. Suthan , 1276 Islintion #G7, Toronto, Ont. M9A 3J9 Pager (416) 328-0403 புத்தக வெளியீட்டு விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

# விளையாட்டுத் தகவல்கள் (23)

எஸ். கணேஷ்

## முரளீதரனுக்கு எதிராக சவால் விடும் அவுஸ்திரேலிய நடுவர்கள்



சென்ற விளம்பர இதழில் இலங்கைக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடைப்பட்ட மனதாக்கங்களையும், கருத்து வேறு பாட்டையும் விளக்கி இருந்தேன். இரண்டு அணிகளும் முட்டி மோதிக்க கொண்டு இருக்கின்றன். சென்ற கிழமை பிரச்சனை பல மடங்கு முற்றி வெடித்துள்ளது.

தமிழனுக்கு எங்கு போனாலும் பிரச்சனைகள் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. நாட்டில் மட்டும் அல்ல, அரசியலில் மட்டும் அல்ல தற்போது விளையாட்டிலும் கூட எதிர்ப்புகள். இவ்வளவிற்கும் காரணம் ஒரு தமிழ் மகன் உலகத்திலேயே சிறந்த கிரிக்கெட் பந்து வீச்சாளார் என்ற எரிச்சல். இதில் ஒரு உண்மை என்னவெனில் இலங்கை அணியை சேர்ந்த சகல சிங்கள விளையாட்டு வீரர்களும் முரளீதரனுக்கு சார்பாக மற்றைய நாட்டு வீரர்களுக்கு சவால் விடுகிறார்கள்.

அவுஸ்திரேலியாவின் Top Umpire ஆன Darrell Hair என்பவர் எழுதிய புத்தகத்தில் முரளிதரனின் பந்துகள் செல்லுபடியற்றவை என்று எழுதிவிட்டார். எழுந்தது பிரச்சினை ICC (International Cricket Council) இவர் Public Media க்கு ஒரு நடுவர் இப்படியான கருத்துகளை கொடுக்க முடியாது என்று January 15ம் திகதி இவ் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. இதன்படி அவுஸ்திரேலியா நடுவர் எழுதியது பிழை என்று இவருக்கு தற்போது தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 3 Test போட்டிகளிலும் 6 One-Day போட்டிகளிலும் இவர் நடுவராக கடமையாற்ற முடியாது என்ற தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேலதிக விசாரணைமூலம் இவரது பதவியே பறிக்கப்படலாம். இதைப்பற்றி சென்ற இதழில் எழுதியிருந்தேன்.

தற்போது புதிய பிரச்சனை ஒன்று எழுந்துள்ளது. மேற்படி தண்டனையால் அவுஸ்திரேலிய கிரிக்கெட் நடுவர்கள் இலங்கை அணியை எதிரிகள் போல் நோக்குகின்றனர். அத்துடன் இதுவரை அவுஸ்திரேலிய அணியும் பல தோல்விகளை இலங்கை அணியிடம் கண்டுள்ளது. சகலதும் சேர்ந்து தற்போது இலங்கை அணிக்கு எதிராக கிளம்பியுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் Carlton & United One-Day போட்டிகளில் முக்கியமாக January 23ந் திகதி இங்கிலாந்து அணிக்கும் இலங்கை அணிக்கும் நடைபெற்ற போட்டி வரலாற்றில் முக்கியமானதும் புதிய ஒரு பிரச்சனையும் உருவாகிவிட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு எதிராக 18 வது ஓவரில் முரளீதரன் வீசிய பந்தை அவுஸ்திரேலிய Umpire ஆக கடமையாற்றிய Ross Emerson என்பவர் No-Ball என்று கூறிவிட்டார். உடனே எழுந்தது பிரச்சனை இலங்கை அணி கப்டன் ரணதுங்கவிற்கும் Umpire Emersonக்கும் காரசாரமான விவாதம் எழுந்தது. அத்துடன் இலங்கை அணித் தலைவர் தனது அணியை விளையாடாமல் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார். மேற்படி நடைபெற்ற பல பிரச்சனைகளை நோக்கும் போது அவுஸ்திரேலிய Umpire தனது நாட்டைச் சேர்ந்த சக Umpire ஆனவருக்கு கிடைத்த தண்டனைக்கு பழிவாங்கும் முயற்சியாகவே மீண்டும் முரளீதரனுக்கு எதிராக No-Ball என அழைத்தார் என கருத இடமுண்டு. பின்பு மீண்டும் இலங்கை அணி களத்தில் இறங்கியது. ஆத்திரம் கொண்ட இலங்கை அணி திறமையாக விளையாடி இவ் ஆட்டத்தில் வெற்றியும் கண்டது. உலகத்தில் என்னதான் பிரச்சனைகள் யார் கொடுத்தாலும் நாம் விளையாடி வெல்லுவோம், எங்களிடம் திறமையுள்ளது என்பதை மீண்டும் ஒரு முறை இலங்கை அணி நிரூபித்துள்ளது.

இப்பிரச்சனை எழுந்து இரு வழக்குகள் ICC க்கு முறைப்பாட்டுக்கு வந்துள்ளன. ஒன்று Emerson இனின் Umpire பதவி பறிக்கப்பட வேண்டும் என்று இலங்கை அணி ஒரு வழக்கை கொடுத்துள்ளது. மற்றைய வழக்கு இலங்கை அணி தலைவர் நடுவருக்கு எதிராக வாதிப்பது பிழை என்று அவுஸ்திரேலியா அணி வழக்கு தொடர்ந்துள்ளது இதில் ஒரு வேடிக்கை என்னவெனில் Umpire ஆன Emerson தனது குற்ற உணர்வினால் இவ்வழக்கை சந்தியாது தனக்கு உடம்பு சுகமில்லை என்று கூறி ஓய்வெடுக்க தனது வீடு சென்றுள்ளார். இவ் இரு வழக்குகளை அடுத்த கிழமை எடுத்துக்கொள்ளப்படும். இதில் முக்கியமாக குறிப்பிடகூடிய விடயம் என்னவெனில் அவுஸ்திரேலியா கிரிக்கெட் ஆதரவாளர்கள் ஒவ்வொரு ஆட்டத்திலும் முரளீதரன் பந்து வீசும் போது கூக்குரல் போடுகிறார்கள். இது தான் அவுஸ் ரேலியாவில் Sportsman Ship என்று உலகமே கேலி செய்கின்றது?!

பரபரப்பாக நடைபெற்ற இவ் ஆட்டத்தின் முடிவுகளை பார்ப்போம். முதலில் துடுப்பெடுத்தாடிய England அணி 50 ஓவார்களில் 3 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 302 ஓட்டங்களை பெற்றது. மேற்படி பிரச்சனையில் இலங்கை அணியின் மனோநிலை பாதிக்கப்படும் இலங்கை அணி தோல்வியை தழுவும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் எம்மை யாரும் அசைக்க முடியாது என்ற நம்பிக்கையில் இலங்கை அணி களம் இறங்கியது. முதலில் Jayasuriya 51 ஓட்டங்களும் Jayawardene 120, Tillakaratne 28, ரணதுங்க 41 ஆகிய ஓட்டங்களை பெற்று இலங்கை அணி விளாசி தள்ளியது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் 49.4 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 303 ஓட்டங்களை எடுத்து ஒரு ஓட்டத்தால் இலங்கை அணி வெற்றிபெற்றது. இதில் முக்கியமாக இறுதி ஓவரில் கடைசி விக்கட்டுக்கு முரளீதரனும், விக்கிரமசிங்கவும் ஆட முரளீதரன் 49.4 வது ஓவரில் கடைசி வெற்றிக்குரிய ஓட்டத்தை பெற்றுக் கொடுத்தார். இதில் Man of the match விருது Jayawardeneக்கு வழங்கப்பட்டது.

இச் சுற்றுப்போட்டியில் இதுவரை நடைபெற்ற போட்டிகளின் முடிவுகளின் விபரங்களைப் பார்ப்போம்.

| | | | | |
|---|---|---|---|---|
| January 10, 99 | Australia Vs | England | England | 7 ஓட்டங்களால் வெற்றி |
| January 11, 99 | England Vs | Srilanka | England | 4 விக்கெட்டுக்களால் வெற்றி |
| January 13, 99 | Australia Vs | " | Australia | 8 விக்கட்டுக்களால் வெற்றி |
| January 15, 99 | Australia Vs | England | Australia | 9 விக்கெட்டுக்களால் வெற்றி |
| January 17, 99 | Australia Vs | England | England | 7 விக்கெட்டுக்களால் வெற்றி |
| January 19, 99 | England Vs | Srilanka | England | 7 விக்கெட்டுக்களால் வெற்றி |
| January 21, 99 | Australia Vs | " | Srilanka | 3 விக்கெட்டுக்களால் வெற்றி |
| January 23, 99 | England Vs | " | Srilanka | 1 விக்கெட்டுக்களால் வெற்றி |
| January 24, 99 | Australia Vs | " | Australia | 80 ஓட்டங்களால் வெற்றி |
| January 26, 99 | " Vs | England | Australia | 16 ஓட்டங்களால் வெற்றி |
| January 29, 99 | England Vs | Srilanka | England | 128 ஓட்டங்களால் வெற்றி |

மேலும் February 10ந் திகதிவரை 6 ஆட்டங்கள் நடைபெற இருக்கின்றன. இம்மும்முனை போட்டியில் யார் வெற்றிபெறுகிறார்கள் என்ற முடிவுடன் இச் சுற்றுப் போட்டியை பற்றிய மேலதிக விபரங்களுடனும் அடுத்த விளம்பர இதழில் சந்திப்போம். -நன்றி


சீமை

Seemmai
CATERING & TAKE OUT SERVICES
Tel: 439-6815

Open 7 Days a Week 11:00 am - 11:00 pm

970 BRIMORTON DR.,
SCARBORO. ONT.
Orton Park & Brimorton Dr.
TEL: (416) 439-6815

உங்களிற்கு தாயக நினைவைக் கொண்டுவரும் தராதர கொண்ட உணவுவகைகள். எம்மிடம் ஒருமுறை விஜயம் செய் உண்மையை அறிந்துகொள்ளுங்கள்.

********************

அத்துடன் ஐயர், மண்டப வசதி, மணவறை, கமரா, மணப்பெ அலங்காரம், வீடியோ, அனைத்திற்கும் ஒரே இடம்.



Pillayar Traders

SRILANKAN . EAST & WEST INDIAN
GROCERIES & TEXTTILES
3630 LAWRENCE AV. E., SCARBORO
☎ : 438-7746


### விஷேச போட்டி இல. 81

1930 - 1998ம் ஆண்டு வரை "கொமன் வெல்த்" விளையாட்டுகள் நடைபெற்ற நாடுகளில் 4 ஐ தருக

